செ.வெ.எண்: 711 நாள்: 04.11.2020

**தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடி சேர்க்கை நாள் நீடிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள்தகவல்**

தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தற்போது நேரடி சேர்க்கை நாள் நீடிக்கப்பட்டுள்ளது. பாரத் மின்மிகு நிறுவனத்தில் சேர்வதற்குரிய வெல்டர் பிரிவில் மற்றும் சில தொழிற் பிரிவுகளில் காலி இடங்கள் உள்ளது. அதனை நேரடி சேர்க்கை மூலமாக (Spot Admission) 20.11.20 வரை பயிற்சியாளர்கள் சேர்க்கப்படவுள்ளனர். 14 வயது முதல் 40 வயது வரை நிரம்பிய ஆண் அனைவரும் பயிற்சியில் சேரலாம் மகளிருக்கு கணினி பயிற்சி (COPA) பிரிவில் 40 இடங்களும் மற்றும் டெக்னிசியன் மெக்கட்ரானிக்ஸ் தொழிற் பிரிவில் 24 இடங்களும் காலியாக உள்ளன. மகளிருக்கு வயது வரம்பு இல்லை.

9-ம் வகுப்பு 10-ம் வகுப்பு தோல்வியுற்றவர்கள், 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு தேர்ச்சி, கல்லூரி இடைநீக்கம் அல்லது இளங்கலைப் பட்டம் பெற்றவர்களுக்கும் இப்பயிற்சி முடித்த உடன் NTC சான்றிதழுடன் ரூ 12000/- குறையாமல் வேலைவாய்ப்பு பெற்றுதரப்படும்.

* 8-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (இரண்டு (அ) ஏதேனும் ஒன்று )
* சாதி சான்றிதழ் அசல் / மாற்றுச்சான்றிதழ் அசல் (TC) /ஆதார் அட்டை நகல் / நான்கு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ / ஏடி எம் கார்டு (கல்வி கட்டணம் செலுத்துவதற்கு )

இந்த அரிய வாய்ப்பினை தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு -செய்தி மக்கள் தொடர்வு அலுவலர் தஞ்சாவூர்